**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**<u>அசல் வழக்கு எண்</u> : 98/2012**

**DW1 – திரு. ஹரிதாஸ், த/பெ.வேணு**

**29.01.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**<u>நேரம் 15.07 மணி</u>**

சில ஆண்டுகள் கழித்து தான் பஞ்சாயத்தார் முன்னிலையில் சமரசம் செய்து என் தாயாரை அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். பிராதில் 1வது அட்டவணை சொத்து சர்வே எண்.123/5, பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் 10வது வரிசையாக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அப்பாவும் சித்தப்பாவும் பாகப்பிரிவினை பத்திரத்திற்கு முன்பாக சில சொத்துக்களை விற்றுவிட்டார்கள். பி.வா.த.சா.ஆ.9 ஆவணத்தின் படி தாவா 1வது அட்டவணை சொத்தில் 5 சென்ட் மட்டும் விற்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் 2வது அட்டவணை சர்வே எண். 124 பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் 11வது வரிசையாக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் 3வது அட்டவணை சர்வே எண். 24/2பி பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் 1வது அட்டவணையில் 2வது வரிசையாக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் 4வது அட்டவணை சர்வே எண். 26 பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் 1வது அட்டவணையில் 3வது வரிசையாக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.19 ன் படி இந்த சொத்தில் 1200 சதுர அடியை என்னுடைய பொது அதிகார முகவர் மூலம் விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த பத்திரத்தில் விற்பனை செய்பவர் பெயரில் என்னுடைய சகோதரி 3வது பிரதிவாதி பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை 2006ம் வருடத்தில் செய்யப்பட்டுள்ளது, 2012ம் வருடத்தில் உள்ள விற்பனை பத்திரம்

பி.வா.த.சா.ஆ.19ல் என் சகோதரி பெயர் ஏன் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் வாரிசுகள் அனைவரும் கையொப்பம் போட வேண்டும் என்று கூறியதால் அவர் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. அதனால் பாகப்பிரிவினை பத்திரம் பி.வா.த.சா.ஆ.5 சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 5வது அட்டவணை சர்வே எண். 38/2ஏ4 பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் 1வது அட்டவணையில் வரிசை 4 மற்றும் 5 ஆக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய சொத்து மறுபடியும் விற்பனை செய்யப்பட்டது என்பதற்காக ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை விற்பனை செய்யவில்லை. தாவா சொத்தில் 7வது அட்டவணை சர்வே எண். 38/2சி2 பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் 1வது அட்டவணையில் வரிசை 7 ஆக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய சொத்து மறுபடியும் விற்பனை செய்யப்பட்டது என்பதற்காக ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அதை விற்பனை செய்யவில்லை. தாவா சொத்தில் 8வது அட்டவணை சர்வே எண். 42/7 பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் 1வது அட்டவணையில் வரிசை 8 ஆக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.22 ல் 30 சென்ட் நிலத்தை நான், என் தாயார், என் சகோதரர் ஆகியோர் என் சகோதரி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். மேற்கூறிய செட்டில்மெண்ட் பத்திரம் 29.08.2013 ல் தாவா தாக்கல் செய்த பிறகு எழுதப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் 8வது அட்டவணை சர்வே எண். 43/1 பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் 1வது அட்டவணையில் வரிசை 9 ஆக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய சொத்து மறுபடியும் விற்பனை செய்யப்பட்டது என்பதற்காக ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்தில் 10வது அட்டவணை சர்வே எண். 7/2 பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் 1வது அட்டவணையில் வரிசை 1 ஆக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய சர்வே எண். 7/2 சொத்தை பி.வா.த.சா.ஆ.11, 12, 14, 15, 23, 24 மற்றும் 25 ஆவணங்களின் படி விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.24 மற்றும் பி.வா.த.சா.ஆ.25 ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு 2021ம் ஆண்டு தான் விற்பனை செய்துள்ளோம் என்றால் சரிதான். குடும்ப கஷ்டத்திற்காக விற்பனை செய்தோம்.

பி.வா.த.சா.ஆ.24 மற்றும் பி.வா.த.சா.ஆ.25 ல் இந்த வழக்கு நிலுவையில் இருந்தது குறித்து குறிப்புக்கள் இல்லை என்றால் சரிதான். 2வது வாதியின் கணவர் ஏகாம்பரம் தான் இந்த சொத்துக்கு அட்வான்ஸ் வாங்கிக்கொடுத்தார். 2வது வாதியின் கணவர் இந்த சொத்துக்கு அட்வான்ஸ் வாங்கிக்கொடுத்தார் என்று ஆதாரமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ.11, 12, 13, 14, 15 ஆவணங்கள் பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை பத்திரத்திற்கு பிறகு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.12 ஆவணத்தில் 2வது பக்கத்தில் சர்வே எண்.7/2 இந்து கூட்டு குடும்ப பொது சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் 11வது அட்டவணை சர்வே எண். 75/2 பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் சேர்க்கப்படவில்லை என்றால் அதை பாகப்பிரிவினை பத்திரம் செய்வதற்கு முன்பாகவே விற்றுவிட்டார்கள். பி.வா.த.சா.ஆ.10 ஆவணத்தில் என் அப்பா மற்றும் என் சித்தப்பா மகன்கள் எழுதிக்கொடுத்த பத்திரம், அதில் என் அப்பாவின் பாகம் விற்கப்படாமல் என் சித்தப்பா மகன் 6வது பிரதிவாதிக்கு வரவேண்டிய பாகத்தை தான் விற்றுள்ளார் என்றால் அப்போது பாகப்பிரிவினை செய்யப்படவில்லை. எல்லாரும் கையொப்பம் செய்துள்ளோம். பி.வா.த.சா.ஆ.17 ஆவணத்தில் என் சித்தப்பாவின் மகன்கள் 5 மற்றும் 7வது பிரதிவாதிகளுக்கு வரவேண்டிய பாகம் மட்டும் விற்கப்பட்டுள்ளது, அதிலும் என் அப்பாவின் பாகம் விற்கப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.18 ஆவணத்தில் 20.09.2004 அன்று என் தந்தையின் மறைவுக்கு பிறகு பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினைக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான். சர்வே எண்.75/2 சொத்தை நான், என் தாயார், என் சகோதரர் மட்டும் சேர்த்து விற்றுள்ளோம் என்றால் சரிதான். மேற்கூறிய சொத்தில் வாதிகளுக்கு தெரியாமல் விற்றதால் இந்த பத்திரம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த பத்திரத்தில் வாதிகளுக்கு ஏற்கனவே பங்கு கொடுத்துவிட்டோம் என்று வாசகங்கள் இடம்பெறவில்லை என்றால் எந்த பத்திரத்திலும் அவ்வாறு எழுதவில்லை. அவர்களுக்கான பாகத்தை நாங்கள் கொடுத்த காரணத்தினால் அவர்கள் அதை மூன்றாவது தரப்பினருக்கு விற்றுவிட்டார்கள், எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. பி.வா.த.சா.ஆ.24 மற்றும் 25 இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு விற்றுள்ளோம், இந்த வழக்கு

பாகப்பிரிவினை வழக்கு அவர்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குடும்ப சூழ்நிலை மற்றும் என் அண்ணனின் மருத்துவ செலவுக்காக விற்றோம். சர்வே எண்.7/2 ல் என் அண்ணன் சொந்தமாக 19 சென்ட் வாங்கினார், அதையும் தாவா அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளது. என் அண்ணன் என்ன வேலை செய்தார் என்றால் விவசாயம் செய்து வந்தார். என் அண்ணன் சொந்தமாக விவசாய நிலம் வைத்திருந்தார் என்பதற்கு ஆதாரமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அண்ணன் வாங்கிய 19 சென்ட் நிலத்தில் அதை விற்றதில் என் அப்பாவும் ஒருவர் என்றால் சரியல்ல. 2021ல் தான் விற்கப்பட்டது. பி.வா.த.சா.ஆ.23 ஆவணத்தில் விற்றவர்கள் பெயரில் என் அப்பாவின் பெயர் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் 13வது அட்டவணை சர்வே எண். 251/1ஏ2 பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் 2வது அட்டவணையில் வரிசை 2 ஆக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய சொத்து மறுபடியும் விற்பனை செய்யப்பட்டது என்பதற்காக ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை, என் தந்தையார் உயிருடன் இருக்கும்போதே விற்கப்பட்டது. என் தந்தையார் இருக்கும்போதே விற்ற சொத்தை எவ்வாறு பி.வா.த.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தில் 2வது அட்டவணையில் வரிசை 2 ஆக போட்டுள்ளோம் என்றால் மேற்படி இடம் விற்கப்படவில்லை என்று சாட்சி தற்போது கூறுகிறார். பாகப்பிரிவினை பத்திரம் மற்றும் அதற்கு முந்தைய பரிவர்த்தனையின்போது நான் இளவராக இருந்ததால் எனக்கு அதுகுறித்து விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ.1 ல் என்னுடைய சகோதரிகளுக்கு 15 சென்ட் மற்றும் 15 சென்ட் என்று உயில் எழுதி கொடுத்துள்ளார், அதைப்போல் என் சகோதரருக்கும் 19 சென்ட் விற்கப்பட்டுள்ளது, ஆகவே, வாதிகளுக்கு கொடுக்கப்பட்ட சொத்து பாகத்திற்காக கொடுக்கப்பட்ட சொத்து என்பது பொய் என்றால் என் சகோதரிகளுக்கு சர்வே எண்.39/2பி ல் 18 சென்ட் மற்றும் 18 சென்ட் என்று என் தந்தை எழுதிக்கொடுத்துள்ளார். அதை கடந்த 3 வருடமாக அனுபவித்துவிட்டு மூன்றாம் தரப்பினருக்கு விற்றுள்ளார்கள். அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். 19 சென்ட் நிலம் என் தந்தை மட்டும் கொடுக்கவில்லை, டில்லி என்ற என்னுடைய ஊர்க்காரரும் என் தந்தையும் சேர்ந்து தான் 2ம் பிரதிவாதியான என்

அண்ணனுக்கு கொடுத்துள்ளார்கள். டில்லி என்பவருக்கு இந்த சொத்தில் உரிமை கிடையாது என்றாலும் பட்டாவில் அவர் பெயர் இருந்ததால் கிரைய பத்திரத்தில் அவர் பெயர் சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ.20 மற்றும் பி.வா.த.சா.ஆ.21 ஆகியவை வில்லங்கச்சான்றிதழ்கள் என்றாலும் அதை யார் பதிவிறக்கம் செய்தார்கள் என்று இல்லாததால் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ.27 ஆவணம் 10.06.2024 அன்று கொடுக்கப்பட்டது என்றாலும் அதன்பின்னர் என் சகோதரர் 2ம் பிரதிவாதிக்கு மருத்துவ சிகிச்சை பெற்று பேசும் ஆற்றலை பெற்றுவிட்டார் என்றாலும் வேண்டுமென்றே அவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ.28, 29, 30 ஆவணங்கள் அவருக்கு மருந்துகள் வாங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். பி.வா.த.சா.ஆ.30 ஆவணம் 26.08.2024 அன்று கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு பின்னர் உள்ள மருந்து சீட்டுக்கள் கொடுக்காத நிலையில் அவருக்கு குணமடைந்துவிட்டது என்றாலும் மேலும் மருந்துகள் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தற்போது வரை மருந்து சாப்பிட்டுக்கொண்டு தான் இருக்கிறார். என் வீட்டில் அவர் தான் வயது முதிர்ந்தவர் என்றாலும் அவருக்கு தான் அனைத்து விவரங்களும் தெரியும் என்றாலும் அவரை சாட்சியாக விசாரித்தால் உண்மை வெளிவரும் என்பதால் அவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் என் தாயார் முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே என் தந்தையுடன் உறவில் இருந்ததால் அவருக்கு எந்த சொத்தும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அவர் மூலம் பிறந்த குழந்தைகளுக்கும் இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் எந்த சொத்தும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதிகளை சேர்க்காமல் தாவா சொத்து சம்மந்தமாக நான் செய்த பரிவர்த்தனைகள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>நேரம் 16.10 மணி</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.